சிறந்த புளொக் தயாரிப்பாளர்
Quality BLOCK MAKERS
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Ceylon ☆ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 123

National Tamil Daily தேசிய தினசரி

(14-6-65)

விசுவாவசு வைகாசி 32 வளர் பிறை 13 திங்கட்கிழமை

மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தாரின்
**விசேஷ அறிவித்தல்**

எங்களது மில்க்வைற் நீல சோப்பின் இரு நிற வர்ண மேல் உறைகளைப் போல் போலி லேபல்கள் கொண்ட சோப்புகள் விற்பனையாகின்றன.

எங்களது வாடிக்கையாளர்கள் இவற்றில் ஏமாறாது எங்கள் லேபல்களைக் கவனித்து வாங்கும்படி அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

# வியட்னும் நிலை மோசம்

## ராஜதந்திரிகள் எச்சரிக்கை

### கொரில்லா படைகள் முன்னேற்றம்; ஒருபகுதியில் அரசாங்க துருப்புகள் வாபஸானது

வாஷிங்டன், ஜூன் 15

தென்வியட்னமில் சோதனை மிகுந்த கட்டம் உருவாகிவிட்டதென்றும் பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதுடன் "எதுவும்" நிகழலாம் என்றும் வாஷிங்டனில் ராஜதந்திரிகள் கருதுகின்றனர். வடக்குவியட்னமில் அமெரிக்கத் தாக்குதல்கள் அதிகரித்துவந்த பொழுதிலும் தென்வியட்னமில் வியட்காங் கொரில்லாக்களின் எதிர்த்தாக்குதல்கள் பலமாக இருப்பதுடன் பெருமளவு விளைவுகளையும் ஏற்படுத்தி வருவதாக இங்கிருந்து வெளியாகும் செய்திகள் கூறுகின்றன.

**அரசாங்க துருப்புகள் பின்வாங்கின**

இதற்கிடையே தென்வியட்னமில் ஒருபகுதியில் வியட்காங் துருப்புகளுக்கும் அரசாங்க துருப்புகளுக்குமிடையே கடுமையான சண்டை நடைபெற்றதைத் தொடர்ந்து அரசாங்க துருப்புகள் பின்வாங்க நேரிட்டதாக செய்திகள் கூறுகின்றன.

டான்சாய் இப்பொழுது வியட்காங் கொரில்லாக்கள் வசமாகிவிட்டதாகக் கலைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. வியட்னும் தகராறு பெரியதொரு யுத்தமொன்றை ஏற்படுத்தலாம் என்று சைகோனில் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

**தலைவர்கள் கோரிக்கை**

வடக்குவியட்னும் மீது குண்டுபொழிவதை தற்காலிகமாக நிறுத்துமாறு கனடா பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் விடுத்த கோரிக்கையை வரவேற்ற இந்தியப்பிரதமர் வடவியட்னமில் மட்டுமல்ல எந்த நாட்டின்மீதும் வேறுநாடுகள் குண்டுகள்மூலம் தாக்குதல் நடத்தக் கூடாது என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் சாஸ்திரிக்கு அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் அனுப்பிய செய்தி "மிக முக்கியமானது" என்று கனடாவில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

---

## சிதானந்தஜி நாளை யாழ்ப்பாணம் வருகிறார்

### மாலையில் நகரமண்டபத்தில் வரவேற்பு

யாழ்ப்பாணம், திங்கள்

அகில உலக திவ்யஜீவன சங்கத்தலைவர் ஸ்ரீமத் சுவாமி சிதானந்தஜி மகராஜ் நாளை காலை யாழ்ப்பாணம்வந்து சேருவார். யாழ்ப்பாணம் திவ்ய ஜீவனசங்கம் அவருக்கு யாழ்ப்பாணம் மாநகரசபையில் நாளை மாலை ஒரு பாராட்டுவிழா செய்ய ஒழுங்கு செய்துள்ளது.

நாளை காலை 5-00 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்படும். காலை 7-00 மணிமுதல் 8-00 மணிவரை நல்லூரில் உள்ள ஆசிரமத்தில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொள்வார்.

முற்பகல் 9-00 மணிதொடக்கம் 12-00 மணிவரை அடியார்களுடன் உரையாடல் செய்வார். பகல் 12 மணி முதல் 1-00 மணிவரை மகேஸ்வரபூசை நடைபெறும். பிற்பகல் 4-00 மணிமுதல் 4-30 வரை சங்கக்கட்டடம் பார்வையிடல். நல்லூரில் உள்ள 'சிவஸ்தானில்' கூட்டுப்பிரார்த்தனை.

பிற்பகல் 5 மணிக்கு யாழ் நகரசபை முன்றலில் நகரசபை முதல்வர் தேநீர் விருந்து அளிப்பார். மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் பாராட்டுவிழா நடைபெறும்.

யாழ்ப்பாணம் திவ்யஜீவன சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இப்பாராட்டு விழாவிற்கு சங்கத்தலைவர் திரு. செ. தனபாலசிங்கம் தலைமை வகிப்பார். இப்பாராட்டுவிழாவில் சுவாமி சிதானந்தஜி மகராஜ் ஆசியுரை நிகழ்த்துவார்.

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜியும் சைவபரிபாலன சபைத்தலைவர் திரு. த. முத்து சுவாமிப்பிள்ளையும் இப்பாராட்டுவிழாவில் உரை வழங்குவார்கள்.

16-ம் திகதி புதன்கிழமை காலை 9-00 மணிக்கு கன்னாகம் கிளைச்சங்கத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். முற்பகல் 10-30 மணிக்கு விமானத்தில் திருக்கோணமலைக்கு பிரயாணமாவார்.

---

## கிளிநொச்சிப் பகுதியில் புதிய பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சியிலிருந்து இராமநாதபுரத்துக்குப் பரீட்சார்த்தமாகப் பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டது. கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினமும் இப்பரீட்சார்த்தசேவையில் கலந்து கொண்டார்.

பரந்தனிலிருந்து பூநகரிக்கும் பளையிலிருந்து இயக்கச்சி ஊடாகக் கோவில்வயலுக்கும் முறிகண்டியிலிருந்து அக்கராயனுக்கும் பஸ்சேவை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது.

இராமநாதபுரத்தில் உள்ள கந்தவனப்பிள்ளையார் கோவிலில் கும்பாபிஷேகமும் ஆராதனைகளும் நடைபெற்றன.

போக்குவரத்து விஸ்தரிப்புச் செய்யும் நோக்கமாக வீதிகள் திருத்தப்பட்டதுடன் பஸ்கள் ஓடிக்காட்டப்பட்டன.

குறிப்பிட்ட நான்கு பாதைகளிலும் பஸ் ஓடுவதற்கு இரட்டைத்தட்டு பஸ்களை உடனடியாக அனுப்புமபடி அமைச்சருக்கும், இ. போ. ச. பிரதம அதிகாரிக்கும் கிளிநொச்சி எம். பி. தந்தியடித்துள்ளார்.

இப்புதிய பஸ்சேவை இன்னும் இரண்டு வாரங்களில் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பளையிலிருந்து கிளாலிவரையும் ஒருபுதிய சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேலிடங்களைக் கேட்டுள்ளார்.

---

**S. R. S.**
**ஜவுளி மாளிகையில்**
**சேலை ஒன்று**
**11-00 ரூபா**
தொடக்கம்
பலவிலைகளில்
பெற்றுக்கொள்ள
நல்ல சந்தர்ப்பம்.
**லங்கா சேலைகளும்**
எமது
சொந்த கைத்தறிகளில்
தயார் செய்யப்பட்ட
**நெசவு சேலைகளும்**
ஏராளமாக
**விற்பனைக்கு உள்ளன.**
மொத்தமாக வாங்கும்
வியாபாரிகளுக்கும்
சங்கக் கடைகளுக்கும்
விசேஷ கமிஷன் உண்டு.
**எஸ். ஆர். செல்லத்துரை**
316, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296

## பொருட் காட்சியின் முக்கியம்

பருத்தித்துறை, ஞாயிறு

புலோலி இந்து ஆங்கில கல்லூரியில் விஞ்ஞானம், கைப்பணி, உயிரியல், புவியியல், பொருட்காட்சியினை கல்லூரி அதிபர் திரு எம். ஏ. தங்கராசா சம்பிரதாயப்படி திறந்து வைத்தார்.

மாணவர்கள் வெறும் புத்தகப்படிப்புடன் நின்றுவிடாது அவர்களது பல்வேறு துறை ஆற்றல்களை வளரவும் ஆக்க வேலைகளில் ஆர்வத்தை உண்டாக்கவும் இது போன்ற பொருட்காட்சிகள் பெரிதும் உதவும் எனவும் தமது உரையில் குறிப்பிட்டதுடன் பொருட்காட்சிக்காக தீவிரமாக உழைத்த மாணவர்களைப் பாராட்டுவதாயும் தெரிவித்தார்.

---

## "ஒற்றுமையில் தான் முன்னேற்றம் கிடைக்கும்"

### யாழ்ப்பாணத்தில் உள்நாட்டு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி

குரும்பசிட்டி, ஞாயிறு

"யாழ்ப்பாணக் குடாநாடு சனத்தொகையில் கூடியதாகவும் முன்னேற்றம், வளர்ச்சி அடைந்த பிரதேசமாகவும் காணப்படுகிறது. ஆனாலும் பொருளாதாரத் துறையில் போதிய அபிவிருத்தி இங்கு இல்லாதிருப்பதை நாம் காணலாம். அரசாங்கம் வெகு விரைவில் யாழ்ப்பாணப்பகுதியில் குடிசைக் கைத்தொழில் நிலையங்களை ஸ்தாபிக்க முன்வந்துள்ளது. இதனை நன்கு பயன்படுத்தி பொருளாதார கைத்தொழில் விருத்தியில் இப்பகுதி மக்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும். முன்னேற்றம் ஜனத்தொகை கூடிய பகுதிகளுக்கு எவ்வித உதவிகள் தேவை எனவும் குறைந்த பகுதிகளுக்கு வேண்டிய வேலைத்திட்டங்களையும் குறைபாடுகளையும் அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்".

இவ்வாறு உள்நாட்டு விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எச். சி. குணவர்த்தனா வலிகாமம் வடக்கு கிராமமுன்னேற்றச்சங்கங்களின் சமாஜ ஆதரவில் சனிக்கிழமை காலை நடைபெற்ற கருத்தரங்க நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைத்தும் பேசுகையில் குறிப்பிட்டார்.

மல்லாகம் ஆங்கிலபாடசாலை மண்டபத்தில் நடாத்தப்பட்ட இக்கருத்தரங்கத்திற்கு பண்டிதர் வ. நடராஜன் தலைமை வகித்து வரவேற்புரை நிகழ்த்தினார். கருத்தரங்கம் ஆரம்பமாகுமுன்னர் நிரந்தரக்காரியதரிசி, வடமாகாண அரசாங்க அதிபர் ஆகியோர் மலர்மாலை சூட்டப்பட்டு மேள

(6-ம் பக்கம் பார்க்க)

---

## உருளைக்கிழங்கு தட்டுப்பாடு

பருத்தித்துறை, ஞாயிறு

உருளைக்கிழங்கிற்கு யாழ்ப்பாணத்தில் பெரும் தட்டுப்பாடேற்பட்டிருக்கிறது. ஒரு இறாத்தல் கிழங்கு 60 சதம் வரை கூடிய விலைக்கு விற்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அத்துடன் "லெக்ஸ்பிறே" என்னும் பால் மாவும் கிடைப்பது கஷ்டமாகவிருப்பதால் சில வியாபாரிகள் பதுக்கி வைத்திருந்து நாலு ரூபாவுக்கு மிக கூடுதலான விலைக்குவிற்பதாக அறியப்படுகிறது.

---

## தமிழ் மொழியில் விசேஷ வர்த்தகப் பரீட்சை

### இவ்வருட இறுதியில் நடைபெறலாம்

சுழிபுரம், ஞாயிறு

ஆசிரியர்சேவா சங்க விசேஷ வர்த்தகப்பரீட்சை தமிழ் மொழியில் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரி வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் தலைமையில் ஒரு தூதுகோஷ்டியினர் நேற்றுமுன்தினம் கல்வி மந்திரியைப் பேட்டிகண்டனர். தமிழ்மொழியில் பரீட்சை நடத்தவேண்டியதன் அவசியத்தை திரு அமிர்தலிங்கம் மந்திரிக்கு சுட்டிக்காட்டினார்.

தமிழ்மொழியில் பரீட்சை நடத்த வேண்டியதன் அவசியத்தை உடன் கவனிப்பதாகவும் இதுகுறித்து மிக விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் மந்திரி தூதுகோஷ்டியினருக்கு உறுதியளித்ததாகக் கூறப்படுகிறது. அநேகமாக இவ்வருட பிற்பகுதியில் இப் பரீட்சைகள் நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென நம்பப்படுகிறது. இது விஷயமாக தமிழ் எம். பி.க்கள்பலர் கல்வி மந்திரியைப் பேட்டிகண்டது இங்கு குறிப்பிடப்பாலது.

### மணிவாக்கு

நீங்கள் ஒவ்வொருவரும் நாள்தோறும் கூட்டு வழிபாடுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் வருடத்தில் 365 சத் சங்கங்களில் தவறாது பங்குபற்றுங்கள். ஏற்கனவே நடைபெறும் வாரவழிபாடுகளோடு மட்டும் நின்றுவிடாமல் தினமும் குறைந்தது 40 நிமிஷங்களையாவது சத்சங்கத்தில் கழியுங்கள்.

— சுவாமி சிதானந்த சரஸ்வதி.


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
வைகாசி மீ 32 உ. (14-6-65)


## விசா தடைகள்

சென்னையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில் கலந்துகொள்வதாகவிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த இரு அறிஞர்கள் விசாவழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக வரமுடியாது போய்விட்டதாம். இலங்கைப் பெண்ணை மணம்செய்த இந்தியர் ஒருவரின் 'விசா'வை நீடிக்க அனுமதி மறுக்கப்பட்டதால் மூன்று குழந்தைகளுக்குத் தந்தையாரான அவர் நாடுகடத்தப்பட்டிருக்கிறார்...! மனமிட்டும் நூல்வைவிட்டில்லையென்பதுபோல் ஆட்சி மாறிய பின்னரும் அதிகார வர்க்க ஆட்சியில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லையென்பதையே இச் சம்பவங்கள் காட்டுகின்றன.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் பொதுவாக நாட்டுமக்கள் பலரும் குறிப்பாக தமிழ்பேசும் மக்களும் பெரும் ஆறுதலடைந்தனர். அரசாங்கமும் இதற்கேற்ற முறையில் வாக்குறுதியளித்தது மக்களின் சுதந்திரத்தில் பிரயாண சுதந்திரமும் ஒன்று. முன்னைய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட பிரயாணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. செலாவணியில்லாமல் வெளிநாடு செல்லதாம் இருந்தால் இங்கிருந்து செல்வதற்கு அனுமதியளிப்பதென்பது தளர்த்தப்பட்டவிதியின் ஒன்று. ஆனால் வெளிநாட்டிலிருந்து ஒருவர் இங்குவரவேண்டுமானால்—இங்கிருந்து விடுக்கப்பட்ட அழைப்பின்மீது வருவதாயிருந்தாலும் கூட அவர் இங்கு தங்கியிருக்கும் நாட்களுக்கு ஒருநாளைக்கு பத்துரூபாய் வீதம் செலாவணி கொண்டுவரவேண்டுமென்றும் அப்போதுதான் அவருக்கு இலங்கை அரசாங்கம் விசாவழங்குமென்றும் ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இது முன்னைய அரசாங்கம் விதித்தது தான்.

இங்கு தமிழ் பேசும் மக்கள் பெருமளவில் வாழ்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து அறிஞர்களும் கலைஞர்களும் வந்து செல்லவேண்டுமென்று அவர்கள் விருப்புகிறார்கள். செலாவணி வருடங்களாக இந்த வாய்ப்பு இல்லாது போய்விட்டது. இப்பொழுது திருக்குறள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இரு தமிழறிஞர் இங்கு வரவிருப்பதாக அறிந்ததும் அவர்கள் பெருமகிழ்ச்சியடைந்தனர். துரதிர்ஷ்ட வசமாக விசா கெடுபிடிகள் இன்னும் நீங்காததால் அவர்கள் வரவில்லை. மக்களுக்கு பெரும் ஏமாற்றம். திருக்குறள் மகாநாட்டுக்கு மூல காரணமாக விளங்குபவர் ஒரு பார்லிமெண்ட் உறுப்பினர். அரசாங்கத்தை ஆதரிப்பவர். அவர் முயற்சி செய்தும்கூட தமிழ்நாட்டு அறிஞர்கள் இங்குவர முடியாது போய்விட்டதென்றால் இதன் அர்த்தம் என்ன?

இலங்கைப் பெண்ணான மாணிப்பாயைச் சேர்ந்த ஒரு பெண்ணை இந்தியாவை—தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் மணம் செய்துகொண்டார். அவருக்கு மூன்று குழந்தைகள். இங்கு தொழிலும் செய்துவந்தார். அவரது விசாவை நீடிக்க அரசாங்கம் மறுத்துவிட்டதாம். அரசாங்கத்தை ஆதரிக்கும் பிரபல தமிழ் எம். பி. ஒருவர் முயற்சிசெய்தும் விசாவை நீடிக்க அனுமதி மறுக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. திருமணப்பதிவு செய்யப்படவில்லையென்றும் பிள்ளைகளுக்கு பங்கீட்டரிசிப் புத்தகம் இல்லையென்றும் காரணம் கூறப்படுகிறது. கொலைக் குற்றவாளிகளுக்கே மன்னிப்பு வழங்கப்படுகையில் பல வருடங்கள் இங்கு வாழ்ந்து திருமணம் செய்து மக்களையும் பெற்ற ஒருவரை மேலும் மூன்று மாதங்கள் தங்குவதற்கு அனுமதியளிப்பது பாவமா? இவ்விதச் செயல்கள் தான் சட்டவிரோதக் குடியேற்றத்துக்குக் காரணம் என்று கூடக் கருதலாம்.

இந்த இரு சம்பவங்களும் முன்னைய அரசாங்கத்தில் இருந்த டயஸ் அதிகார ஆட்சி இன்னும் நீங்கவில்லையென்பதையே காட்டுகிறது. அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ் பேசும் பிரதிநிதிகள் இது விஷயத்தில் கவனமெடுத்து நிலைமையைப் பிரதம மந்திரிக்கும்சுட்டிக்காட்டி இந்த நிலையை மாற்ற தக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

## பரிபாலன சபை கூட்டம்

பருத்தித்துறை,ஞாயிறு பருத்தித்துறையைச்சேர்ந்த தும்பளை நெல்லண்டை அம்மன் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தக் கூட்டம் திரு பொ ஜயாத்துரை தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்-, திரு கே. இராமலிங்கம் உபதலைவர்- திரு என். எம். கந்தசாமி காரியதரிசி- எஸ். சிவலிங்கம் உபகாரியதரிசி- திரு எம்.எஸ், முருகப்பா தனாதிகாரி திரு எஸ், முருகுப்பிள்ளை.

—

## பட்டினத்தடிகள்

பருத்தித்துறை,ஞாயிறு புலோலி தெற்கு சாரையடி வீரபத்திரர் கோவிலில் இலங்கை வானொலி புகழ் ஸ்ரீ இராசிவஅன்பு அவர்கள் "பட்டினத்தடிகள்" என்னும் திவ்யசரித்திரம் பற்றி சங்கீத கதாகாலட்சேபம் நடத்தினர்.

# நாடகாசிரியர் ஈட்ஸின் நூற்றுண்டு விழா

## இலங்கை இன்று கொண்டாடுகிறது

வில்லியம் பட்லர் ஈட்ஸின் நூறாவது பிறந்த தினம் இன்று பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் இலங்கையிலுள்ள பல கலைச்சார சங்கங்கள் ஆகியவற்றின் ஆதரவுடன் கொண்டாடப்படுகிறது.

ஈட்ஸ் அயர்லாந்து தேசத்தில் பிறந்த கவிஞரும் நாடகாசிரியருமாவார். ஈட்ஸின் வாழ்க்கையும் அவரது நூல்களும் இலங்கை மக்களின் வாழ்க்கையுடன் சில குறிப்பான விஷயங்களில் பின்னிப்பிணைந்திருக்கின்றன. அவர் இலங்கையிலுள்ள இரு உற்ற நண்பர்கள் மூலம் சிறந்த தொடர்புகள் வைத்திருந்தார் அவர்களுள் ஒருவர் சீமாட்டி ஓகஸ்டா கிரேகரியாவார் இவர் இலங்கையின் முன்னள் கவர்னர் சேர் வில்லியம் கிரேகரியின் மனைவியாவர். இரண்டாவது நண்பர் திருமதி புளோரன்ஸ் பார். இவர் அதிகமாக ஈட்ஸினுடைய நாடகங்களில் பங்குபற்றி மிகவும் திறமையாக நடித்துள்ளார், திருமதி புளோரன்ஸ் சிறிது காலத்திற்கு பின்னர் சேர் பொன்னம்பலம் இராமநாதனுடைய அழைப்பின் பேரில் இலங்கைக்குவந்து இராமநாதன் கல்லூரி அதிபராகக் கடமையாற்றி, இலங்கை மண்ணிலேயே உயிர்நீத்தார். திருமதி புளோரன்ஸ் லண்டனில் பல கல்லூரிகளில் கல்வி பயின்ற பின்னர் லண்டன் யுனிவர்சிட்டி கல்லூரியில் படித்து ஆங்கிலத்திலும், இலக்கியத்திலும் விசேஷ முறையில் பாண்டித்தியம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. வேத ஆகம நூல்களையும் இந்தியாவிலுள்ள சாதுக்கள் எழுதிய நூல்களையும் படித்து அதற்கு மதிப்பு கொடுத்து வந்தார் திருமதி புளோரன்ஸ்,

ஈட்ஸ் கீழைத்தேய மெய்விளக்கத்துறையிலும் என்ன ஆய்விலும் அதிக கவனம் செலுத்தினர், இளம்வயதிலேயே இவர் அறிவுகழகங்களில் சேர்ந்து பணியாற்றி மேலும் கடவுளர் வு இயக்கங்களுடனும் தொடர்புகொண்டு பலவற்றை அம்மையாருடன் சேர்ந்து பணி புரிந்துவந்தார். இந்த இயக்கங்களின் நோக்கங்களினால் இலங்கையும் பெருமளவிற்கு செல்வாக்கடைந்தது,

ஈட்ஸ் தனது நாடகங்களில் மரபுப்பண்புகளுக்கு ஏற்ற முறையில் பல சங்கீத நாடகங்களையும், நடனங்களையும்செயல்முறைபடுத்தினர் இந்த நாடகங்கள் சிங்கள நாடக நூலாசிரியர் டாக்டர் சரத்சந்திரா தற்பொழுது மேடையேற்றும் நாடகங்களைத் தழுவியிருக்கிறது

# நாட்டிலும் நகரிலும்

கல்முனை சந்தைக் கெதிரிலே அரசாங்க விற்பனவு பகுதியின் (மார்க்கட்டிங் டிபார்ட்மெண்ட்) கடை ஒன்றிருக்கிறது. அங்கே, பார்த்தால் விடாய் தீரக் கூடிய அழகான லேபல் போட்ட, தகரங்களில் அன்னாசிப்பழச் சாறு இருக்கிறது. இந்தக் கொடிய வெய்யில் காலத்தில் ஒன்றே கால், ஒன்றரை ரூபாய் கொடுத்து ஒரு அன்னாசிப் பழத்தை வாங்க மனமில்லாதவனாய் ஒரு டின்னை வாங்கினால் ஒரு வாரத்துக்காவது கரைத்து குடிக்கலாமென வாங்கினேன். வீட்டில் அதைக் கொண்டு போய் திறந்ததும் கண்ணீர் விடுக் கலக்க வேண்டிய அவசியம் ஏற்படாமல் அவர்களே நிறையத் தண்ணீர் விட்டு அடைத்திருப்பது தெரியவந்தது!

இது மட்டுமல்ல. ஒரு கன்னுக்கு மேல் ஒரு டின்னை வைத்திருக்கப் பட்டதை அறிந்து அடுத்த நாள் அறிந்து கொள்ள நேரிட்டது. டின்னில் மீதியிருந்த பழச்சாறு புளித்து கெட்டுப் போய் விட்டது! ஒருடின் ஆறே சதம் தானே என்று நினைத்து வாங்கிய எனக்கு அப்பொழுது தான் உண்மை புலப்பட்டது.

எனக்கே இப்படி ஏமாற்றமானால் வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை ஆவலோடு ஒரு டின்னை வாங்கி உடைத்துவிட்டு [illegible] எவ்வளவு கிடைப்பார்கள்?

விற்பனவுப் பகுதியின் கடைகள் இலங்கையின் முக்கியமான பட்டினங்கள் எல்லாவற்றிலும் இருக்கின்றன அந்தந்த பட்டினங்களைச் சுற்றியுள்ள கிராமங்களில் உற்பத்தியாகும் மரக்கறி, பழவகை முதலியனவற்றை உற்பத்தி செய்வோரிடமிருந்து நேரடியாக வாங்கிவந்து பொது மக்களுக்கு சகாயமான விலைக்கு விற்பது இந்தக் கடைகளின் நோக்கம், இதனால் உற்பத்தியாளரும் பாவிப்பாளரும் பாவிப்பனவும் தரகரின் தொந்தரவிலிருந்து விடுபடுவார்கள்.

ஆனால் கல்முனைக்கிலிருக்கும் மேற்படி கடையில் [illegible] கருவில் உற்பத்தியாகும் கத்திரிக்காய், முருங்கைக்காய், புடலங்காய், வெண்டிக்காய் முதலியவற்றை காணமுடியாது. அங்கே [illegible] கரட், போஞ்சி, லீக்ஸ் முதலியவை தான் கிடைக்கும். இந்த மர்மம் என்னவென்று புரியவில்லை.

* * *

வாழ்க்கைச் செலவுகள் ஏறிக்கொண்டு போவதற்கு முக்கியமான ஒரு காரணம் மரக்கறி, மீன் ஆகியவற்றின் விலை. போன மார்கழியில் ஏற்பட்ட சூறாவளியினால் இவ்விரண்டு முக்கியமான உணவுப் பொருட்களும் மிகவும் தட்டுப்பாடாய் போய் விட்டன. மற்றைய வருடங்களில் இந்த சோழக காலத்தில் மன்னிட்டி, குருநகர், கரைநகர், காங்கேசன்துறை முதலிய வடகரைப் பகுதிகளில் ஏராளமான மீன் பிடிக்கப்படும். சூறாவளியினால் அனுபவம் வாய்ந்த மீனவர்கள் பலர் மறைந்ததுமல்லாமல் மீன்பிடி சாதனங்களும் மறைந்தன. அத்துடன் இப்பொழுது உயிருடன் இருப்பவர்கள் சூறாவளியை நினைத்தவுடனே கடலுக்கு போகத் தயங்குகிறார்கள். எந்த நேரத்திலும் காற்று எப்படித் திரும்புமோ என்று அவர்களுக்குப் பயம், இந்தச் சமயத்தில் விற்பனவு பகுதி போன்ற அரசாங்க நிறுவனங்கள் பொது மக்களுக்கு எவ்வளவோ ஆறுதலளிக்கக் கூடிய வகையில் உதவி செய்யலாம். மரக்கறி, மீன் ஆகியவை ஏராளமாகவும் சகாயமாகவும் கிடைக்கக் கூடிய பகுதிகளில் அவற்றை வாங்கி தட்டுப்பாடுள்ள இடங்களில் விற்கலாமல்லவா!

* * *

முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்தாலும் மறைக்கலாம், ஆனால் திருடிக்கொண்டு போன யானையை எங்கே ஒளித்து வைப்பது? தென்னிலங்கையில் ஓரிடத்தில் யானையை சோரமாக கடத்திச் சென்று விட்டதாக ஒரு வழக்கு நடக்கிறது. யானை தன் சொந்த விருப்பத்துடன் சென்றதா அல்லது பலாத்காரமாக கடத்திச் செல்லப்பட்டதா என்பது இனிமேல்தான் வெளிச்சமாகும், சொல்லப்பட்ட திகதியன்று யானையும் தனது இரு தந்தங்களையும் பிரயோகப்படுத்திக் கொண்டு நீதி மன்றத்துக்கு சென்றதாம். யானை உத்தியோக மொழியில் வாக்கு மூலம் அளித்ததா அல்லது தன் சொந்த தாய் மொழியை நியாயமான அளவு உபயோகித்ததா என்பதும் சரியாகப்புலப்படவில்லை.

— 'வழிப்போக்கன்'

### ஐயாறன் எழுதுவது

பளை முருகமூர்த்தி ஆலய தேர்த்திருவிழாவுக்கு ஓர் அன்பர் சென்ற சனிக்கிழமை அழைத்துச்சென்றார். அன்று வேறு இரு அலுவல்கள் இருந்தன, செல்லமுடியாதென்றே நினைத்தேன். கார் வசதியும் இல்லையே என்று தயங்கினேன். எதிர்பாராத முறையில், அந்த இரு அலுவல்களும் ஒத்திப்போடப்பட்டன, காரும் கிடைத்துவிட்டது! இது யாருடைய முயற்சி? அந்த முருகமூர்த்தியின் திருவருள் அல்லவா! அவன் இழுத்தாட்கொள்கின்றான் என்பதில் ஐயமே இல்லை. அவன் அருளால் தானே அவன் தாள் வணங்கமுடியும்!

* * *

எழிலிலே சித்தங்கேணி பிள்ளையார் கோவிலிலும் அன்றுதான் தேர் நல்ல ஆடைகளைக் கட்டிக்கொண்டு ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் பயபக்தியுடன் மையில் காளாஞ்சி காணிக்கையுடன் ஏராளமாகக் கூடியிருந்தது அங்கே தனியழகும் சிறப்புமளிக்கின்றது. தேர்த்திருவிழா என்றால் பிரிந்துள்ள குடும்பங்களும் ஒன்றுபடுகின்றன. வெடுதூரத்திலுள்ளவர்களும் வந்து எல்லோரும் சேர்ந்து குலதெய்வத்தை வழிபட்டு அதன் மூலம் ஒற்றுமைபடுகின்றனர். மக்களை ஒன்றுபடுத்தக்கூடிய மேலான சக்தி தெய்வம் தானே. அராலியில் அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் கோவில், தாவடிப்பிள்ளையார் கோவில், சுதுமலை அம்மன் கோவில், கொக்குவில் புதுக்கோவில் முதலியவைகளிலும் தேர்த்திருவிழாக்கள். பல கோவில்களிலும் புதுப்புதுத் தேர்கள் கட்டுகின்றனர். வருடத்துக்கு ஒரே ஒருநாள் பயன்படக்கூடிய தேரைத் தமிழர் பெரும்செலவில் கட்டுவதேன்? காரணம் இருக்கத்தான்வேண்டும்.

தேரை, வசதியுள்ள சகல சாதியினரும் சேர்ந்து ஒற்றுமையாக இழுப்பதால் தேர் மூலம் சாதி உயர்வு தாழ்வு நீங்கி, ஒற்றுமைமனமுமமைய ஏற்படுவதாக உள்ளது அதி மிக விசேஷமல்லவா? நாட்டு மக்களை ஒன்றுபடுத்தவேண்டுமென்று பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. கைதடி பொறுத்தமடியில் தேர்த்திருவிழா இப பணியை இன்னும் வெற்றியுடன் செய்து வருகின்றன பார்க்காதவர்களை எல்லாம் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது தேர் விழாவிலே. கதிர்காமத்தில் இருந்து சண்முகவடிவேல் சுவாமிகள் வந்து பஜனை செய்தார். இமயமலையிலிருந்து வந்திருந்த மூத்தமுனிவரிடம் அவர் சென்றமாதம் காஷாயம் பெற்றதுடன் "கிருஷ்ணானந்த முனி" என்ற தீட்சா நாமத்தையும் பெற்றாராம்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அவர் அரசாங்கத்தில் கிளரிகல் சேவையில் ஈடுபட்டிருந்தார். இளவயதிலேயே மொழிச்சட்டம்காரணமாக ஓய்வுபெற்றார் காலடையாக கதிர்காமம் சென்று அங்கிருந்தே தவ வாழ்க்கை வாழ்ந்து மேலான சைவப்பணியைச் செய்துவருகின்றார். இனிமையாகப் பஜனை செய்வார். ஆபீஸில் வேலைசெய்கையில் அதிகாலையிலேயே சென்று, சிரமதானம் முதலியவற்றைச் செய்வாரென்றும், அவர் மனம் அப்போதே தெய்வீக வழியில் திரும்பிவிட்டதென்றும், அவர்மீது தமக்குப் பெருமதிப்பு ஏற்பட்டுவிட்டதென்றும், அவருக்கு மேலதிகாரியாகஇருந்த இஞ்சினியர் கார்த்திகேசு, சமீபத்தில் மட்டகளப்பில் வைத்து என்னிடம் தெரிவித்

(6-ம் பக்கம் பார்க்க)

# தென் வியட்னுமில் புதிய யுத்த மந்திரிசபை?

## சிவிலியன் அரசாங்கம் ராஜிநுமா; தேசிய சட்டசபையும் கலைப்பு

### பௌத்தர் - கத்தோலிக்க வேறுபாடுகளை களைந்தெறிய முயற்சி

சைகோன், ஜூன் 13

தென்வியட்னுமில் தேசிய சட்டசபை கலைக்கப்பட்டுவிட்டது. சிவிலியன் அரசாங்கம் ராஜிநுமா செய்துவிட்டதைத் தொடர்ந்து இங்கு ராணுவ ஆட்சி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவிலியன் அரசாங்கத்தின் ஜனுதிபதி, பிரதமர்; மந்திரிகள் உட்பட பலரும் ராஜிநுமா செய்துவிட்டபொழுதிலும் புதியதொரு ஆட்சியை அமைக்கும்வரை பிரதமரே தொடர்ந்து பதவியிலிருக்க வேண்டுமென்று புதிய இராணுவசபை கோரியுள்ளது.

பௌத்த தலைவர்களையும் கத்தோலிக்க பிரமுகர்களையும் கொண்ட புதிய உயர்சபையொன்று அமைக்கப்படலாம் என்றும் அநேகமாக இது ஒரு யுத்த மந்திரி சபையாக இருக்கலாமென்றும் அமெரிக்க ராஜாங்கவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தென்வியட்னுமில் இராணுவம் தனியாக ஆட்சி நடத்துவதா அல்லது சிவிலியன்—இராணுவக் கூட்டாட்சி நடத்துவதா என்பதில் கருத்து வேற்றுமை நிலவுவதால் இங்கு மதற்ற நிலைமை ஏற்பட்டிருப்பதாகவேறு சில செய்திகள் கூறுகின்றன.

## தென் வியட்னுமில் கடும் சண்டை

### தென் கொரியா யுத்தப்படைகள் சைகோன் வந்தன

சைகோன், ஜூன் 13

தென்வியட்னுமில் டொங்சொய் நகருக்கு அருகே வியட்காங் கொரில்லாக்களுக்கும் அரசாங்கத் துருப்புகளுக்குமிடையே கடுமையான சண்டை நடைபெறுவதாக இன்று காலை வெளியான செய்திகள் கூறுகின்றன. சுமார் 500 வியட்காங்கொரில்லாக்கள் ஒரு இடத்தில் அரசாங்கத் துருப்புகளை சுற்றி வளைத்துவிட்டனர் என்றும் ஒரு பகுதியை அவர்கள் தம் வசமாக்கிக்கொண்டனர் என்றும் சைகோனிலிருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன

**ஒருவர் பலி**

நேற்று வடக்கு வியட்னுமில் பறந்து சென்ற அமெரிக்க விமானமொன்று சுட்டுவீழ்த்தப்பட்டது. அந்த விமானத்தின் பைலட் மாண்டார்.

**தென் கொரியா துருப்புக்கள்**

வியட்காங் கொரில்லாக்களுடன் யுத்தம் புரிவதற்காக தென்கொரிய யுத்தப்படைப் பிரிவினர் சைகோனுக்கு வந்திருக்கின்றனர், இங்கு தென் வியட்னும் அரசாங்கத் துருப்புகளுக்கு உதவியாக முன்னர் தென்கொரிய உதவித் துருப்புகள் வந்திருந்தன,

## மன்னருக்கு காயம்

அம்மான், ஜூன் 13

ஜோர்டான் மன்னர் ஹூஸைன் பிரயாணம் செய்த கார், பாதையை விட்டு விலகி சுவர் ஒன்றில் மோதியதால் மன்னர் காயமடைந்தார்.

இந்த விபத்து இருவாரங்களுக்கு முன்னர் நடைபெற்றதென்று இன்று அறிவிக்கப்பட்டது, மன்னர் சுகமடைந்து வருவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

## அல்ஜியர்ஸ் மாநாடு

அல்ஜியர்ஸ், ஜூன் 13

அல்ஜீரிய தலைநகர் அல்ஜியர்ஸில் இம்மாதம் 29-ம் திகதி ஆரம்பமாகும். ஆசிய—ஆபிரிக்க உச்சிமகாநாட்டில் கலந்துகொள்ள இதுவரை 48 நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன, பிலிப்பைன்ஸ், சூடான் ஆகியநாடுகளிடமிருந்து இதுசம்பந்தமாக எந்தவிதத் தகவலும் இல்லை. அநேகமாக 60 நாடுகளின் தலைவர்கள் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

சோவியத்யூனியன், மலேசியா தென்வியட்னும்போன்ற நாடுகளை அழைப்பது குறித்த இதுவரை எந்தவிதமான தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை.

—

## உஷார்!

ராவல்பிண்டி, ஜூன் 13

பாகிஸ்தான் விமானப் பிராந்தியத்தில் இந்திய ஏர்லைன்ஸ் விமானங்கள் பறந்து சென்றால் உடனடியாக வானொலித் தொடர்பு மூலம் அறிவிக்கவேண்டுமென்று டாக்டாம் விமானநிலைய அதிகாரிகளுக்கு பாகிஸ்தான் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

—

## அரசியல் தலைவர் விடுதலை

ஆக்ரா, ஜூன் 13

காஞவில் கடந்த மூன்று வருடகாலமாக, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இரு அரசியல் தலைவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இவர்களுடன் சுமார் 100 தடுப்புக்காவல் கைதிகளும் விடுவிக்கப்பட்டனர்.

காஞ அதிபர் என்ஜூமாவைக் கொலைசெய்ய சதிசெய்ததாக இவர்கள் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

## இந்திய பிரச்னைகளைத் தீர்க்க கனடா ஆவல்

### பயனுள்ள பேச்சுக்கள் நடத்தியதாக சாஸ்திரி தகவல்

ஒட்டாவா, ஜூன் 13

இங்கு சுற்றுவிஜயம் செய்யும் இந்தியபிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரி நேற்று கனடா வர்த்தக, கைத்தொழில், நிதிமந்திரிகளைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினுர்.

இந்தியாவை எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்னைகள் குறித்து நன்கு ஆராயப்பட்டதாகவும் சாத்தியமான சகல உதவிகளையும் அளிக்க கனடா தயாராக இருப்பதாகவும் இந்தப்பேச்சுகளிலிருந்து தெரியவருவதாக பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரி இதுபற்றிப் பின்னர் தெரிவிக்கையில் இந்திய தொழில் அபிவிருத்தி குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகவும் கனடாவுக்கான இந்திய இறக்குமதிகளை மேலும் அதிகரிக்க யோசனை தெரிவிக்கப்பட்டுதாகவும் கூறினுர்.

"இந்தியாவுக்கு பலதுறைகளிலும் உதவிகள் அளிக்க கனடா விருப்பம் கொண்டிருக்கிறது. இந்தியாவின் உணவுப் பிரச்னைகளைத் தீர்க்கவும் கனடா யோசித்துள்ளது. உரிய ஒப்பந்தங்கள் விரைவில் கைச்சாத்தாகும்" என்றும் சாஸ்திரி கூறினுர்.

**பிரதமர்கள் சந்திப்பு**

கனடாப் பிரதமர் திரு. லெஸ்டர் பியர்சனுடன் பிரதமர் சாஸ்திரி நடத்திய பேச்சுகளின்போது இந்திய-பாகிஸ்தான் நெருக்கடிகள் ஆலோசிக்கப்பட்டதாகவும் கட்ச் தகராறும் இதில் இடம்பெற்றதென்றும் கூறப்படுகிறது.

—

## இன்னமும் முடியவில்லை?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் சகல அரசாங்க அலுவலகங்களையும் ஓர் இடத்தில் நிறுவுவதற்காக அண்மையில் கட்டி முடிக்கப்பட்ட செயலகம் இன்னமும் திறந்துவைக்கப்படவில்லை. கடந்த பொதுத்தேர்தலுக்கு முன்னதாக அப்பொழுது கூட்டரசாங்கத்தில் நிதிமந்திரியாகவிருந்த டாக்டர் என். எம். பெரேரா கட்டடத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைப்பார் என எதிர்பார்க்கப்பட்டது,

மின்சாரத்தொடர்பு வேலைகள் இன்னமும் பூரணமாகச் செய்துமுடிக்கப்படாததே திறப்புவிழாவின் தாமதத்துக்குக் காரணமாம்.

## கெய்ரோவுக்கு அயூப் இரண்டு நாள் விஜயம்



கராச்சி ஜூன் 13

பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கான் ராவல்பிண்டியிலிருந்து இன்று இங்கு வந்து சேர்ந்தார். ஐக்கிய அரபுக் குடியரசில் இருதினங்கள் விஜயம் செய்யும் பொருட்டு இன்றுமாலை அவர் கெய்ரோவுக்குப் புறப்படுவார்.

கெய்ரோவிலிருந்து லண்டனுக்கு விஜயம் செய்தபின்னர் ஆசிய—ஆபிரிக்க உச்சிமகாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு அல்ஜியர்ஸ் செல்வார்.

இந்திய-பாகிஸ்தான் பகைமையைப் போக்கி இருநாடுகளிடையே நேசஉறவுகளை ஏற்படுத்துவதில் ஐக்கியஅரபுக் குடியரசு அதிபர் நாஸர் முயற்சிகள் மேற்கொள்வார் என நம்பப்படுகிறது.

## சாஸ்திரிக்கு ஜோன்ஸன் கடிதம்

### வியட்னும் பிரச்னை பற்றியது?



ஒட்டாவா ஜூன் 13

கனடாவுக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் திரு லால் பகதூர் சாஸ்திரிக்கு அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸன் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அமெரிக்காவிலுள்ள இந்தியப் பிரதிநிதி திரு பி கே. நேரு நேற்று இங்கு திடீரென விஜயம் செய்து இங்கு சுற்று விஜயம் செய்யும் பிரதமர் சாஸ்திரியிடம் ஒரு கடிதத்தை ஒப்படைத்தார், இக்கடிதம் அமெரிக்க அதிபர் அனுப்பியதாக அறிவிக்கப்பட்டபொழுதிலும் இதன் விபரம் தெரிவிக்கப்படவில்லை

அநேகமாக இக்கடிதம் வியட்னும் பிரச்னைபற்றியதாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

—

## இந்தியாவுக்கு கனடா உதவி

ஒட்டாவா, ஜூன் 13

இந்தியாவில் இரண்டாவது அணுசக்தி நிலையமொன்றை நிறுவிக்கொடுப்பதில் கனடா உதவிபுரியுமென்று கனடா கைத்தொழில் மந்திரி நேற்று கூறினுர்.

இதுசம்பந்தமாக இதுவரை ஒப்பந்தம் எதுவும் கைச்சாத்திடப்படவில்லை என்றும் அநேகமாக இந்த உதவியை கனடா நிச்சயம் செய்துகொடுக்கும் என்றும் அவர் கூறினுர்,

## மாணவனே ஆசிரியர்!

விஸ்பாடன் ஜூன் 13

உலகில் இதுவரை வேறு எங்கும் கையாளாத நூதனமான கல்வி முறை ஒன்றை மேற்கு ஜெர்மனியிலுள்ள விஸ்பாட்டன் நகரில் பரிசோதனை முறையில் இப்பொழுது கையாண்டு வருகிறுர்கள். இக்கல்வி முறையில் எந்த மாணவரும் எந்த வகுப்பிலும் 'தோல்வி' அடைவதே இல்லை, அத்துடன் மாணவரின் தனித்திறமையையும், சுயேச்சையான போக்கையும் வளர்க்கும்வகையில் இந்த முறை அமைந்திருக்கிறது.

இப் புதிய முறைப்படி "வகுப்புகள்" எதுவும் நடத்துவதில்லை எந்த வகுப்பிலும் எந்த மாணவரும் "தோல்வி" அடைவதில்லை, ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள் "மாஸ்டர்கள்" "பயிற்சியாளர்கள்" என்பது அந்த இரண்டு பிரிவுகளாகும். பயிற்சியாளர் பிரிவைச் சேர்ந்த மாணவன் பள்ளிவாழ்க்கை பற்றிய தனது ஆரம்பக் கருத்துக்களை தொகுக்கிறுன்; முதலாண்டில் அவனுக்குப் பாடம் அதுதான். இதில் அவனுக்குச் சங்கடம் ஏதும் இல்லை என்ருல், அடுத்த ஆண்டிலேயே அவன் "மாஸ்டர்" ஆகி விடுகிறுன். சற்று வயதான இவனைப் போன்ற "மாஸ்டர்கள்" தங்களை விட வயது குறைந்தவர்களுக்கும் மெதுவாகப் பாடங்களைப் புரிந்துகொள்பவர்களுக்கும் போதனையாளர்களாக மாறுகின்றுர்கள்" இதன் மூலம்மந்தமான மாணவர்களுக்கு உதவி அளிப்பதுடன், அவர்களுக்கு பாடங்களை விளக்கிக் கூறுவதன் மூலம் பாடங்களை "மாஸ்டர்கள்" மேலும் நன்ருகப் புரிந்து கொள்வார்கள்.

ஒரு மாணவன் மாஸ்டராக மாறுவது பாடத்திற்குப்பாடம் மாறுபடலாம். உதாரணமாக ஒரு மாணவன் கணிதத்தில் மிகவும் கெட்டிக்காரனுக இருப்பான். மூன்ரும்வகுப்பில் அவன் படித்தாலும், ஆரும் வகுப்புக் கணிதத்தைக்கூட அவன் நன்கு புரிந்து கொள்வான். மற்றப் பாடங்களில் அவன் மற்றச் சகமாணவர்களைப் போலவே இருக்கிறுன், இந்தமாணவன் கணிதத்தில் மட்டும் மாஸ்டராகிறுன். இதனைப் புதிய முறையில் எந்த மாணவனும் அவனைச் சார்ந்துள்ள பிரிவிலிருந்து பிரிக்கப்படுவதில்லை. அதுல் மாணவன் "தோல்வி" என்பதோ ஒரே வகுப்பில் இரண்டாவது ஆண்டும் படிப்பது என்பதோ இல்லை.



சினிமா

# ஆசை அலைகள்

விமர்சனம்

காதல் கலியாணம் செய்து கொண்டவர்கள் பிச்சல் பிடுங்கல் இல்லாமல் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவார்கள் என்றுதான் பொதுவாகப் பலரும் நினைக்கிறார்கள், கலியாணத்துக்கு முன் காதல் வலையில்விழும் ஜோடிகளும் இப்படித்தான் கனவு காண்பார்கள். காதலில் தோல்வியடைந்த காளையோ, கன்னியோகூட கட்டாயக்கலியாணம் செய்துகொண்ட பின்னர், காதல் நிறைவேறியிருந்தால் 'மனம் நிறைந்த நிம்மதியான வாழ்க்கை நடத்தலாமே' என்று கலங்குவதுமுண்டு.

செல்வச் செருக்குள்ள ஒரு பெண்ணைக் காதல் கலியாணம் செய்துகொண்ட ஒரு காளை அன்புக்கும் அகங்காரத்துக்கும் இடையில் அகப்பட்டுப்படும் வேதனை அப்பப்பா!

யார் இவர்கள்? எங்கே இருக்கிறார்கள்? என்றுதானே கேட்கிறீர்கள்? இதோசொல்லிவிட்டேன்.

இந்தக் குடும்பம் இப்பொழுது யாழ்ப்பாணம் 'ராஜா தியேட்டரு'க்கு வந்திருக்கிறது. இந்தக் குடும்பம் மட்டுமல்ல கணவனின் கஷ்டம் மனைவிக்குத் தெரியாமலும் மனைவியின் கஷ்டம் கணவனுக்குத் தெரியாமலும் குடும்பத்தின் கஷ்டம் வெளியே தெரியாமலும் வாழும் அன்பான மற்றொரு குடும்பமும் அங்கே வந்திருக்கிறது. ஆனால் பாவம் அந்தக் குடும்பத்துக்கு ஏற்படும் சோதனை...ஐயையோ...!

இந்த இரு குடும்பங்கள் மட்டுமல்ல, லட்சம் லட்சமாகப் பணம் குவிவதாகச் சொல்லி ஆயிரம் ஆயிரமாகப் பணத்தை 'அபேஸ்' பண்ணும் பேர்வழியையும் பின்னணியின் வாயிற்குள்ளேயே மாட்டின் மடியிலிருந்து பாலை நேராகச் செலுத்தும் தருமவானையும்கூட அங்கு காணலாம்.

இன்னும் புரியவில்லையா? ராஜா தியேட்டரில் இப்பொழுது காட்சியளித்துக்கொண்டிருக்கும் ஆசை அலைகள் என்ற படத்தைத்தான் சொல்கிறேன்.

காதல் கலியாணம் செய்துகொண்ட கணவன் மனைவியாக எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரியும் வறுமையில் செம்மையாக வாழும் கணவனும் மனைவியுமாக பாலாஜியும் சௌகார் ஜானகியும் நடிக்கின்றனர். ஏமாற்றும் சௌடால் பேர்வழியாக நடிகவேள் எம். ஆர். ராதாவும் அவர் தன்னை ஸ்டாராக்கப் போவதுமன்றி தன்னைக் கலியாணம் செய்வார் என்ற நம்பிக்கையில் கையிலுள்ள பணமெல்லாம் கொடுத்த ஏமாந்த பெண்ணாக ஜெமினி சந்திராவும் தோன்றுகின்றனர். நாகேஷ்—திலகம் ராஜகுமாரி, ராமராவ்—பி. ஆர். சுந்தரி ஜோடிகளுடன் சந்தியா, பேபி பத்மினி, பேபி சாமா ஆகியோரும் நடிக்கின்றனர்.

அன்பேதெய்வம். இதுதான் கதையின் கரு. பணமிருந்தும் பண்பான கணவன் இருந்தும் அன்பு இல்லாத மனைவியினால் குடும்பம் சிதறி நாசமாவதுடன் செல்வமும் அழிகிறது. பணமில்லாவிடினும் பண்புள்ள கணவனும் மனைவியும் கஷ்டத்தோடு எவ்விதம் சந்தோஷமான வாழ்க்கை நடத்துகிறார்களென்பதையும் கணவனை இழந்து திக்கற்றவளாக நிற்கும் மனைவிக்கு அன்பு தெய்வமாக நின்று உதவி செய்வதையும் இப்படம் சித்திரிக்கிறது, செல்வமும் செருக்கும் அழியும். ஆணவமும் அகங்காரமும் ஒழியும். அன்பே நிலைக்கும். அதுவே வெற்றி பெறும்.

காரில் சவாரி செய்ய வேண்டும், கணவனுடன் டிராமா, கிளப், பீச் என்று ஊர்சுற்ற வேண்டும் என்று ஆசைஅலைகளில் புரளும் காதல்மனைவியாக விஜயகுமாரியும் அன்பே உருவமான காதல் கணவனாக ராஜேந்திரனும் நல்லகணவன் மனைவியாக பாலாஜி-சௌகார் ஜானகியும், சதியும், புரட்டும், ஏமாற்றும் உருவமாக எம். ஆர். ராதாவும் நடிக்கின்றனர் நாகேஷ், ராமராவ் சிரிப்பூட்டுகின்றனர். ஓரிரு கட்டங்களில் குறிப்பாக நடனக்காட்சியில் சிறிது அலுப்புத்தட்டிய போதிலும் எவருடைய நடிப்பிலும் குறை சொல்ல இடமில்லை. இந்திய நடனத்துக்கும் இங்கிலிஷ் நடனத்துக்கும் உள்ள ஒற்றுமையை ஆடிக்காட்டி விளக்குகிறார் ராதா-அந்த ஒருகட்டமே போதும் அவரை ரசிப்பதற்கு.

பாலாஜி இறந்துவிட்டார் என்பதை ராஜேந்திரன்மூலமும் சௌகார்ஜானகி மூலமும் வாயினால் சொல்லாமல் நடிப்பினால் தெரிவிக்கும் கட்டம் நடிகர்களுக்கு மட்டுமல்ல ஏ. எஸ். ஏ. சாமியின் சிறந்த டைரக்ஷனுக்கும் ஓர் எடுத்துக்காட்டு. ராதா பீடி பற்ற வைக்கும் கட்டத்துடன் அறுவைத விடுதி தீப்பிடித்து எரியும் கட்டமும் டைரக்ஷனின் திறமைக்குச் சான்று.

பாடல்கள் சில கருத்தும் கனிவும் உள்ளன.

'அடக்கிப்பார் இல்லையேல் அடங்கிப் போ' என்ற முறையைப் பின்பற்றும் கணவன்மார் மட்டுமல்ல, ஒவ்வொரு குடும்பமும் பார்க்கக் கூடிய படம் 'ஆசைஅலைகள்'.

— "திரைவண்டு"


கேசமுதிர்வா?
உடனடி நிவாரணத்திற்கு
இன்றே
உங்கள் வியாபாரியிடம் வாங்கிப் பாவியுங்கள்!

**அருத எண்ணெய்**

அருகசாம் பச்சை எனும் தமிழ் மூலிகையும்
வேறு 44 ஆயுர்வேத மூலிகைகளும் சேர்ந்தது.
கண் — தலை — காது — மூக்கு
சம்பந்தப்பட்ட சகல வியாதிகளுக்கு சாலச் சிறந்தது!
—சிறுவர் முதல் பெரியோர்வரை பாவிக்கலாம்—
தயாரிப்பாளர்:
பி. எம். திசாநாயக்க
அருத எண்ணெய் தொழிலகம், கம்பளை. போன்: 454
யாழ்ப்பாணத்துக்கு ஏகவிநியோகஸ்தர்கள்
எஸ். சுப்பிரமணியம் அன் கோம்பனி
53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி: 541, 7068)


## 'சிங்கள வருக்கிருக்கும் உரிமை தமிழருக்கும் உண்டு'

### தேரோ வற்புறுத்தல்

நாரவில்லை, வெள்ளி

'1958-ம் வருடத்தில் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்த மார்க்ஸிஸ வாதிகளான சம சமாஜக் கட்சியினரும் கம்யூனிஸ்ட் கட்சியினரும் இப்போது 'வடை' 'தோசை' எனக் கூறிவருவது நச்சுத் தன்மைவாய்ந்ததாக இருக்கிறது. நாட்டுக்குத் துரோகம் செய்து தாம் பதவியிலிருக்கவே இவ்விதம் துவேஷத்தைத் தூண்டுகிறார்கள்"

இவ்வாறு வண நாரவில்லை தர்மரத்ன தேரோ நாரவில்லை பௌத்த ஆராய்ச்சி அகாடமியில் நடைபெற்ற விசேஷ கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

நாட்டிலுள்ள பல சமூகத்தவருக்கிடையில் நல்லெண்ணமும் ஐக்கியமுமில்லாவிடில் நாடு பொருளாதார விருத்தியடையாது. கடந்த 9 வருடகாலமாக சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே ஐக்கியம் இல்லாதிருந்த காரணத்தினால் இலங்கையின் பொருளாதாரம் சீர்கேட்டடைந்தது.

பல்லாயிரம் வருடங்களாக இலங்கையைத் தாய்நாடாகக் கொண்டுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு சிங்கள மக்களுக்குள்ள அதே உரிமை இருக்கிறது. சிங்களவர்களில்லை என்ற சாதாரண காரணத்துக்காக தமிழர்களையும் முஸ்லிம்களையும் கடலுள் தள்ளிவிடமுடியாது.

## நஷ்ட ஈடாக 33 லட்சம் ரூபா

ராவல்பிண்டி ஜூன் 18

1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நிகழ்ந்த பல்வேறு விபத்துகள் காரணமாக காயமடைந்த, பலியான, காணாமற்போன தொழிலாளர்களுக்கு, அவர்களது குடும்பங்களுக்கு முப்பத்திமூன்று லட்சம் ரூபா நஷ்ட ஈட்டுப்பணமாக பாகிஸ்தான் அரசாங்கம் வழங்கியிருப்பதாக இன்று அறிவிக்கப்பட்டது.

## லண்டனில் துங்கு

லண்டன், ஜூன் 18

மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் இன்று மாலை லண்டன் வந்தடைந்தார்.

லண்டனுக்கு வருமுன்னர் திரு. துங்கு, கெய்ரோவில் அதிபர் நாஸருடன் தென்கிழக்குஆசிய நிலைமை குறித்து பேச்சுகள் நடத்தினார்.

# 'மொழி உரிமைபெறுவதே எமது இலட்சியம்'

கோப்பாய், ஞாயிறு

"தமிழ்பேசும் இனத்தவர்களின் ஆதரவின்றி எந்த அரசாங்கமாயினும் தமது திடவைராக்கியத்துடன் ஆட்சிபீடம் ஏற்கத் தயங்கும் என்பதை இன்றைய சூழ்நிலை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது",

இவ்வாறு கோப்பாய் எம்.பி திரு. சி. கதிரவேற்பிள்ளை, பத்தைமேனியில் தமிழரசுக்கட்சிக்கிளையை ஆரம்பித்து வைக்கும்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:— அற்ப சலுகைகடகாக நாம் இன்று போராடவில்லை. மனித அடிப்படை உரிமைக்காகவே நாம் இன்று போராடுகின்றோம், உத்தியோகம் எடுத்துக் கொடுத்தல் இடமாற்றம் ஆகிய கிறு சலுகைகளின் வழி செல்லுவோமேயானால் நாம் எமது இலட்சியத்தில் நின்றும் ஏமாற்றப்பட்டவர்களாகிவிடுவோம்

வருங்காலச் சந்ததியினரின் தன்மானம்காக்கும் பண்பு வாலிபர்களிடம்தான் தங்கியுள்ளது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் கூறியதாவது:—நாம் தற்போது தேசிய அரசாங்கத்தில் இடைக்கால ஒப்பந்தம் செய்துள்ளோம். இவ்வொப்பந்தம்பலன் கொடுக்குமபோற் தெரிகிறது. பிரதேச சபையின் மூலம் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே நிர்வாகம் வகிக்கும் மொழியாக இருக்கும், இலங்கையில் எந்த மூலையில் வசிப்பவர்களாலும் அரசாங்கத்துடன் தமது தாய்மொழிமூலம் தொடர்பு கொள்ளலாம் எனவே இந்த அரிய பொன்னான சந்தர்ப்பத்தை ஏனையோர் குழப்பாவண்ணம் பார்த்துக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்"

உடுவில்தொகுதி எம்.பி திரு. வி தருமலிங்கம் பேசியதாவது: முன், பண்டா — செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியச்செய்வதற்கு உரிய சூழ்நிலையை உண்டுபண்ணிய அதே தலைவர்கள் இன்றுநாம் உரிமை பெறும் இக்கதிலையைக் குழப்ப முன்வந்துள்ளனர். நமது ஒப்பந்தம் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்மொழியே நிர்வாக மொழியாக இருக்கவகை செய்யும் அரசமொழியாகச் சிங்களம் இருந்தாலும், தமிழ்ப் பிரதேசங்களில் தமிழே நிர்வாக மொழியாயே இருக்கும் என்று அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கும் திரு திருச்செல்வமே பலஇடங்களிலும் கூறியிருக்கின்றார் எனவே அரசாங்கத்தில் இருந்து கூறும் ஒருவரின் கூற்றில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

## சீன வங்கி மூடப்படும்

கோலாலம்பூர், ஜூன் 18

மலேசியாவிலுள்ள "பாங் ஒவ் சைனு" வை மூடும்படி உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் இந்த வங்கி விரைவில் மூடப்படும் என்றும் மலேசிய நிதிமந்திரி அறிவித்துள்ளார்.

## யூகோவில் வெள்ளம்

பெல்கிரேட், ஜூன் 18

வடக்குயூகோஸ்லேவியாவில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 7000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ள அகதிகளுக்கு உதவிகள்புரிவதில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

## நிலச்சரிவு

லண்டன், ஜூன் 18

பிரேஸிலில் நேற்று ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக 8 பேர் மாண்டனர். பலர் காயமுற்றனர்.


REGAL - JAFFNA
NOW SHOWING
Dean Martin
in
Songes in the World
(Totalscope - color)



வெற்றிகரமான 5வது வாரம்!
கிங்ஸ்லி பிளாஸா வெம்பிலி ராஜ்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி) (சீர்கொழும்பு)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30 பி. ப. 2-30, 6-30, 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ்.ஆர்., நாகேஷ்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு

வீடு விற்பனை பற்றி

# குடியிருப்பாளரிடம் முதலில் தெரிவிக்க வேண்டும்

## தூதுகோஷ்டியினரின் யோசனைக்கு மந்திரி இணக்கம்

பம்பலப்பிட்டி, திங்கள்
அகில இலங்கை வாடகைக் குடியிருப்பாளர் சங்கத்தினரின் தூதுகோஷ்டி கடந்த புதன்கிழமை ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்தை சந்தித்து பல பிரச்னைகளை ஆராய்ந்தனர். இந்தப் பேச்சுவார்த்தையின்போது ஸ்தலஸ்தாபன உதவிகமிஷனரும் இருந்தார்.

வாடகை கட்டுப்பாட்டுச் சபைகளின் வாடகைக்கு குடியிருப்போரின் நலனைக் கருத்தில் கொள்ளக்கூடியவர்களையே நியமிக்கவேண்டும் என்ற தூதுகோஷ்டியினரின் கருத்தை மந்திரி ஏற்றுக்கொண்டு விரிந்த அடிப்படையில் சகலரின் நலனையும் பேணக்கூடியவர்களையே சபையில் அங்கத்துவம்வகிக்கச் செய்யவேண்டும் என மந்திரி அபிப்பிராயம் தெரிவித்தார்.

வாடகை வீடுகளில் குடியிருப்பாளர் இருக்கும்பொழுது அந்த வீடுகள் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அந்த வீடு விற்பனை பற்றி குடியிருப்பாளருக்கு தெரிவிக்கப்படவேண்டுமென தூதுகோஷ்டியினர் தெரிவித்த கருத்தை மந்திரி ஏற்றார். குடியிருப்பாளரை வெளியேற்ற 10 வருட காலத்துக்காகுதல் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாதெனவும் அந்த வீட்டில் இருந்தவர் அந்த வீட்டை அரசாங்க பண உதவிபெற்று வாங்குவதற்கு அவகாசம் கொடுக்கப்படவேண்டும் என்றும் தூதுகோஷ்டியினர் மந்திரியிடம அபிப்பிராயம் தெரிவித்தனர். இவ்விஷயம் தனது அதிகாரத்தின்கீழ் வரவில்லை என்றும் இதற்கு பொறுப்பாயுள்ளவர் வீடமைச்சு மந்திரி என்றும் மந்திரி எடுத்துக் கூறினார்.

வீட்டுச் சொந்தக்காரர்களுக்கெதிராக அவர்களின் செய்கைகளுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை மந்திரியின் அங்கீகாரத்தைப் பெறவில்லை எனத் தெரியவருகிறது.

வாடகைக் கட்டுப்பாட்டுச் சபைகள் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்றும் அச்சபைகளில் அங்கம் வகிக்கும் 80 விகிதத்தினர் வாடகை வீடுகளில் குடியிருப்போர்களாக இருக்கவேண்டும் என்றும் மந்திரியை சங்கத்தினர் கேட்டனர். வாடகைகட்டுப்பாட்டுச் சபைகளின் நிலைமையை நன்கு பரிசீலனை செய்யவேண்டும் என்பதை தான் ஒத்துக்கொண்டபோதிலும் உடனடியான மாற்றங்களை தான் செய்ய இயலாமல் இருக்கின்றதென்றும் மந்திரி குறிப்பிட்டார்.

## வதிரி சப்பாத்தை ரஷ்யா வாங்குமா?

உடுப்பிட்டி, ஞாயிறு
"1958ல் இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. பொருளாதார பலம் குறைந்த நாடுகள் வேறு நாடுகளுடன் நட்புறவு கொண்டிருப்பதன் மூலம் தமது பொருளாதாரத்தையும் நாட்டின் தரத்தையும் முன்னேற்ற உதவியாக இருக்கும். எதிர்வரும் அக்டோபரில் சோவியத் நட்புறவுச்சங்க தூதுகோஷ்டியொன்று இலங்கைக்கு வரவிருக்கிறது" இவ்வாறு ரஷ்ய ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த முதற் காரியதரிசி திரு. எம். சித்சேவ் வதிரி பூமகள் வாசகசாலையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் வாலிபசங்கக் கூட்டத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

"இந்தியாவிலிருந்து [illegible] பாடுகள் அமைந்த காலணிகளை சோவியத் நாடு வாங்குகிறதென்றும் அதேபோல வதிரி கூட்டுறவு காலணித் தொழிற்சாலையிலிருந்தும் ரஷ்யாவுக்குச் செருப்புகளை ஏற்றுமதி செய்தால் என்ன?" என்றும் கேட்கிறார்கள். நமது அரசாங்கம் இந்தியாவிடமிருந்து பண்ட மாற்றமாகவே இவற்றை வாங்குகிறது. இத்தகைய வியாபார ஒப்பந்தங்களை எங்கள் மூலமாகச் செய்ய முடியாது. இருநாட்டு அரசாங்கங்களுமே வியாபார ஒப்பந்தங்களுக்குப் பொறுப்பாகும். இன்று இலங்கைத் தேயிலையைக் கூடுதலாக வாங்குவது சோவியத் ரஷ்யாவே".

இக்கூட்டத்திற்கு திரு. ஆர். ராஜேந்திரன் தலைமை வகித்தார். திரு. சி. கோவிந்த வதிரி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க சார்பில் தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது.

## வசதிகள் உண்டு மருந்து இல்லை

### ஆஸ்பத்திரி பற்றி மரணவிசாரணை அதிகாரி

யாழ்ப்பாணம், திங்கள்
'யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் எல்லாவித வசதிகளும் உண்டு ஆனால் மருந்து மட்டும் இல்லை' என்று யாழ்ப்பாண நகரப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்று நடைபெற்ற மரணவிசாரணையின்போது குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வருடம் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் மருந்துகள் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாயும் ஆனால் உண்மையில் இரண்டு லட்சம் ரூபாய் வருடமொன்றுக்கு மருந்துகள் வாங்க செலவாகுமென்றும், யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் மருந்துகள் தட்டுப்பாடு பற்றி அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதாகவும் மரணவிசாரணை அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

60 வயதான எஸ். மாணிக்கம் என்பவரின் மரணம் பற்றி நடைபெற்ற மரணவிசாரணையின்போது மரணவிசாரணை அதிகாரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காலஞ்சென்றவரின் சகோதரர் சின்னவி கந்தையா சாட்சியமளித்தபோது, தனது சகோதரனுக்கு காய்ச்சல் வந்ததாகவும், காய்ச்சல் அதிகரித்தபடியால் ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் சகோதரனுக்கு ஏற்பட்டிருப்பதாக மருந்து செய்யப்படவில்லை [illegible] இரு நாட்களுக்குப்பின் அவர் மரணமானார் என்றும் கூறினார்.

டாக்டர் கே. நடனசந்திரன் சாட்சியமளித்தபோது, காலஞ்சென்றவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது வாய் திறக்க முடியாமல் கஷ்டப்பட்டாரென்றும் ஏற்புக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், இரண்டு தினத்தின்பின் மரணமானாரென்றும் கூறினார்.

ஏற்பினால் ஏற்பட்ட இயற்கை மரணமென்று மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## பேச்சுக்கள் முடிவு

பாரிஸ், ஜூன் 13
பிரெஞ்சு அதிபர் டிகோலுக்கும் மேற்கு ஜெர்மன் அதிபர் ஏர்ஹாட்டுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்கள் நேற்று முடிவடைந்தன. சர்வதேச பிரச்னைகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

வவுனியா

# கரபந்தாட்ட சுற்றுப் போட்டிகள்

வவுனியா, ஞாயிறு
வவுனியா நீர்ப்பாசனப் பகுதி விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் "அம்பலவாணர் வெற்றிக் கேடயத்துக்காக" இங்கு நடைபெற்றுவரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி இறுதி கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது.

கச்சேரி விளையாட்டுக்கழகம், விவசாயக்கழகம், ஸ்தலஸ்தாபன உதவிக்கமிஷனர் பகுதி விளையாட்டுக்கழகம், ஒட்டுச்சுட்டான் நீர்ப்பாசனக்கழகம், வவுனியா நீர்ப்பாசனக் கழகம், கிருஷிக பாடசாலை 'ஏ' 'பி' பிரிவுகோஷ்டிகள், கல்விக் கோஷ்டி, ஒட்டுச்சுட்டான் ஓட்டுத்தொழிற்சாலைக் கழகம், வவுனியா பொலிஸ் கோஷ்டி ஆகியவற்றுக்கிடையே நடைபெற்று வரும் கரபந்தாட்டப் போட்டிகளில் இதுவரைவிவசாயக்கோஷ்டி இருதடவைகளிலும்பொலிஸ் கோஷ்டி இருதடவைகளிலும் வெற்றியீட்டியது. கச்சேரி, ஸ்தலஸ்தாபன உதவிக்கமிஷனர் இலாகா கோஷ்டி, ஒட்டிச்சுட்டான் ஓட்டுத் தொழிற்சாலைக் கோஷ்டி, கிருஷிபாடசாலை 'பி' பிரிவு, வவுனியா நீர்ப்பாசன கோஷ்டி ஆகியவை தலா ஒவ்வொரு வெற்றி ஈட்டியுள்ளது.

இச்சுற்றுப்போட்டி இம்மாதம் 22-ந் திகதி முடிவடையும். இறுதிப்போட்டிகளுக்கான திகதி பின்னர் நிச்சயிக்கப்படும்.

வவுனியா நீர்ப்பாசனப் பகுதி விளையாட்டுக் கழகத்தின் காரியதரிசி திரு. கி. செல்லையா, விளையாட்டுப் பகுதிக் காரியதரிசி திரு. வி. எம். இராசையா ஆகியோர் சுற்றுப்போட்டியை திறமையாக நடத்துவதில் ஈடுபட்டுள்ளனர்

# இந்துக் கல்லூரி 88 ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்துக் கல்லூரி - ஸ்கந்தவரோதயா கல்லூரி கிரிக்கெட் போட்டியில் இந்துக் கல்லூரி 88 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி இரண்டாவது முறையாக நடந்த வாரம் நடைபெற்றது. இவ்வெற்றிக்கு சிவராசா, கந்தசுவாமி இருவருமே காரணமாகும். இவ் இருவரும் எறிந்த பந்துக்கள் ஸ்கந்தவரோதயா வீரர்களின் பல விக்கெட்டுகளை பதம் பார்த்திருக்கின்றன.

யாழ். இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி 116 ஓட்டங்களை எடுத்தது. கந்தசுவாமியும் கோஷ்டித் தலைவருமான வரதராசகுமார் இருவரும் முறையே 42, 12 ஓட்டங்கள் எடுத்தார்கள்.

முதல் இன்னிங்ஸில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி இந்துக் கல்லூரியிலும் பார்க்க மூன்று ஓட்டங்கள் அதிகமாக எடுத்தது. இக்கோஷ்டியைச் சேர்ந்த ஏழு பேர் ஒரு ஓட்டமும் எடுக்கவில்லை. இது ஒரு துரதிஷ்டமே. விக்னேஸ்வரன் 44 ஓட்டங்கள் எடுத்திருந்தார். கந்தசாமி திறமையாக பந்து வீசி 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

யாழ். இந்துக் கல்லூரி இரண்டாவது ஆட்டத்தில் 7 விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 137 ஓட்டங்கள் எடுத்ததும் தனது ஆட்டத்தை முடித்துக்கொண்டது. வரதராசகுமார் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றியீட்டுவதற்கு 13[illegible] ஓட்டங்களை அதுவும் 93 நிமிடத்திற்குள் எடுக்கவேண்டியிருந்தது. ஆனால் 67 நிமிடத்திற்குள் சகலரும் 'வெளி'யேறி விட்டார்கள். இந்த நேரத்துக்குள் 46 ஓட்டங்கள் மாத்திரமே அவர்களால் எடுக்க முடிந்தது.

## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்குமிடையே யாழ். ஹாக்கி சங்கத்தாரால் நடாத்தப்படும் ஹாக்கி போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டி கனகரத்தினம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. கோப்பாயின் சார்பில் குலேந்திரன், புண்ணியமூர்த்தியும், சென். ஜோன்ஸ் கல்லூரியின் சார்பில் சாந்தாராம், பாலசுப்பிரமணியம், விபுலானந்தமூர்த்தி ஆகியோர் மிகவும் திறமையாக விளையாடினார்கள். மத்தியஸ்தர்கள் சே. பூபாலசிங்கம், பி. மகேந்திரன்.

## கல்வி இலாகா வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ் அரசாங்க ஹாக்கி சங்கத்தாரால் நடாத்தப்படும் போட்டியில் கல்வி இலாகா கோஷ்டி கச்சேரியை 4-0 கோல்களால் தோற்கடித்தது. இப்போட்டியின் இடைவேளையில் கல்வி இலாகா ஒரு கோல் போட்டிருந்தது.

இடைவேளையின் பின் கல்வி இலாகா கோஷ்டி மிகவும் திறமையாக விளையாடி மேலதிகமாக மூன்று கோல்கள் போட்டது. கல்வி இலாகாவின் சார்பில் அன்சார், மூசீன், சோமசுந்தரம், கோல்காப்பு வீரர் மகாதேவா ஆகியோரும் மற்றைய கோஷ்டி சார்பில் டாக்டர் துரைசிங்கம், சோமரத்தினம், ராசநாதன் ஆகியோர் நன்கு விளையாடினர். இப்போட்டி கனகரத்தினம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. மத்தியஸ்தர்கள் கே. பூபால், எஸ். குமார்.

## இன்று

தலங்காவல் பிள்ளையார் கோவிலில் ராமாயண [illegible] விரிவுரையில் மாலை 6-30 மணிமுதல் ஸ்ரீமணிபாகவதர் "ரிஷ்யசிருங்கர்" என்னும் சரிதையை கதாகாலட்சேபம் செய்வார். இரவு 9 மணிமுதல் காங்கேசன்துறை [illegible] ஆனந்தவிலாஸ சபையினரால் "[illegible]" எனும் சரிதை கதாகாலட்சேபம் [illegible].

## மிருதங்க அரங்கேற்றம்

தெல்லிப்பழை, ஞாயிறு
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவரும் மிருதங்க வித்துவான் திரு. எம். என். செல்லத்துரையின் சிஷ்யருமான செல்வன் வை. சுப்பிரமணியம் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் வருகிற ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கிறது. இராமநாதன் இசைக்கல்லூரி அதிபர் மகாராஜபுரம் வி. சந்தானம் தலைமையில் நடைபெறும் இவ்வரங்கேற்ற [illegible] கலைஞர்களும் அறிஞர்களும் பாராட்டுரை வழங்குவர்.

வரி விளம்பரங்கள்

**புதிய குடியியல் J. S. C.**
புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதிய புதிய குடியியல் எட்டாம் வகுப்பு விலை: 1ரூ 90 சதம். ஸ்ரீகாந்தா அச்சகம்—புத்தகசாலை, 218, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் 606

**விற்பனைக்கு**
K. சீரியல் பேபி ஒஸ்டின் 1965-ம் ஆண்டுக்குரிய லைசன்ஸ் உட்பட விற்பனைக்குண்டு. காதர் C/o நகுமானியா ஹொட்டல், வவுனியா. 510

மல்லாகம், கோர்ட் ரோட்டில், அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு முன்பாக [illegible] வசதிகளுடைய வீடு, 3 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும்: த. குமாரசுவாமி, கோர்ட் ரோட், மல்லாகம். 400

உடுப்பிட்டி - வல்வெட்டி ரோட்டில் 7 1/2 பரப்பு பனங்காணி விபரம்: க. தியாகராசா, நாவலன்ஸ், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 593

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலிருந்து நூறு யார் தூரத்தில் கண்டி வீதியில் ஐந்தரைப் பரப்பு காணி விற்பனைக்குண்டு. 50 தென்னையும், மா, பலா மரங்களும் ஒரு பழைய வீடும் கிணறு, புதிய மலகூடமும் உண்டு. காணிச் சொந்தக்காரர் க. பரமசாமி. விபரங்களுக்கு: எஸ். கே. திரவியநாயகம், புரக்டர் சாவகச்சேரி. 511

**தேவை**
விஞ்ஞான முறையில் சட்டைகளை வெட்டிப் பழக்குவதற்கும் (Scientific Cutting out) பாலர் வகுப்பு நடத்துவதற்கும் ஆசிரியைகள் தேவை. தராதரப் பத்திரங்களுடன் 20-6-65க்கு முன் விண்ணப்பிக்கவும். காரியதரிசி, வடமராட்சி மகளிர் மன்றம், பருத்தித்துறை. 609

**வைத்தியம்**
சலரோகம், தொய்வு, வாதம், கிரந்தி, நீடு இறத்தல், புத்திரப்பேறு தருந்த முறையில் வைத்தியம் செய்பவர். பொ. செல்லையா, வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 390

**நன்றி நவிலல்**
காட்டுக்கந்தோரில் கடமையாற்றும் வேலுப்பிள்ளை கந்தையா - பாரியார் தவமணி அவர்களின் புத்திரி செல்வி [illegible] மங்கைப்பருவ மங்கல நீராட்டு விழாவிற்கு சமூகந்தந்த அன்பர்கள் அனைவருக்கும் எமது மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். வே. கந்தையா, பாரியார் தவமணி 109/1 பருத்தித்துறை வீதி நல்லூர் 512

## மக்களின் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு
நேற்றும் இன்றும் அநுராதபுரத்தை நோக்கிச் சென்ற ரயில்களில் பிரயாணம் செய்தவர்களிடம் மக்கள் பூக்களையும் மற்றும் பலவகையான உணவுப் பொருள்களையும் கொடுத்தனர். ரயில் நிலையங்களில் வைத்தே இப்பொருள்களை மக்கள் அன்பளித்தனர்.

இன்று போசன் தினமாகையால் பிரயாணம் செய்தவர்கள் அப்பொருள்களை அநுராதபுரத்திலுள்ள பௌத்த விகாரைக்கு எடுத்துச் செல்வார்கள் என்பதே மக்களின் நோக்கமாகும்.

வியாபாரம் பெருக விளம்பரம் செ[illegible]

# நல்லூர்கோவில் பகுதியை புனித இடமாக்க வேண்டும்

## மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர்க்கந்தசுவாமிகோவிலை புனிதஸ்தலமாக்கும் பொருட்டு கோவிலின் நான்கு வீதிகளையும் சுற்றி இருக்கும் இடங்களை புனித பிரதேசமென்று பிரகடனப்படுத்தி அப்பிரதேசத்திற்குள்ளிருக்கும் வர்த்தக ஸ்தாபனங்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று திரு. ஆ. துரைராஜசிங்கம் கொண்டுவந்த பிரேரணை யாழ்ப்பாணம் மாநகரசபையில் நிறைவேறியது.

யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திரு. எஸ். சி. மகாதேவா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

திரு. க. வி. தெய்வேந்திரன் கொண்டுவந்த கீழ்க்கண்ட பிரேரணையும் இக்கூட்டத்தில் நிறைவேறியது.

13-ம் வட்டாரம் குடிசனம் நெருக்கமாக உள்ள பகுதியாகும். இப்பகுதியிலிருந்து நகரின் நாலா பக்கங்களிலுமிருந்து கொண்டுவரப்படும் மலம் லொறிமூலம் ஏற்றப்படுகிறது. மலகூட வாழிகளை இங்கு கழுவியும் சுத்தஞ் செய்கின்றனர். இதன் காரணமாக துர்நாற்றம் வீசி அயலிலுள்ள மக்களின் சுகாதாரத்தைக் கெடுக்கிறது. தொற்றுநோய்கள் நகரில் பரவுவதற்கும் இதுவே முக்கிய காரணமாக இருக்கிறது. எனவே இந்த இடத்தை சுகாதாரத்திற்குப் பங்கம்விளைவிக்க முடியாத ஓரிடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் காணி, வீடு ஆகியவற்றின் சோலை வரிப்பணம் வருடாவருடம் சரிவர சபைக்குச் செலுத்தப்படுவதில்லையென்றும் மின்சார பகுதியில் மின்சார அபிவிருத்திகாகப் புதிதாக ஒருவர் மட்டும் நியமிக்கப்பட்டுள்ளாரென்றும் சபையினால் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பராமரிப்பு வேலைகள் நடைபெறுவதாகவும் ஐந்துசந்தி உபமின்சாரநிலையத்தில் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் திரு. தயபு கந்தையாவினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது மேயர் கூறினார்.

தனிப்பட்ட முறையில் காங்கேசன்துறை வீதியில் உள்ள விளையாட்டுக் கிளப்பில் சபையின மின்சாரப்பகுதி ஊழியர்கள் வேலைசெய்வதாக சந்தேகப்பட்டதை அறிவதாகவும் அவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லையென்றும் கொழும்புத்துறை துறைமுகத்தில் உள்ள மேக்கூரிலாம்பின் பொருட்கள் களவுபோன சம்பவத்தில் இச்சபை ஊழியர்கள் சம்பந்தப்படவில்லையென்றும் குற்றஞ்சாட்டப்பட்டவரை அத்தாட்சிப்படுத்தும்படி கேட்கப்பட்டதென்றும் மின்சார இலாகாவில் ஆறு புதிய தொழிலாளர் நியமனங்கள் நடைபெறவில்லையென்றும் மேயர் தொடர்ந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது கூறினார்.

யாழ்ப்பாணம் மாநகரசபையினால் புதிய மின் கம்பங்கள் தயாரிக்கப்பட விருப்பதாகவும் இவ்வேலையை சபை மேற்கொண்டால் சபைக்கு லாபமேற்படுமெனக் கருதப்படுகிறதென்றும் நகரின் பலபகுதிகளிலும் பழுதடைந்த மின்கம்பங்களின் அவசியமெனக் கருதப்பட்ட வேலைகள் முடிவடைந்துள்ளனவென்றும் மேயர் மேலும் கூறினார்.

## சுவீகரிக்கப்படும் காணி உரிமையாளர்

### வசதிகள் வழங்க கோரிக்கை

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்படும் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு காணி சுவீகரிக்கப்படும்போது தகுந்த வசதிகள் வழங்கவேண்டுமென அரசாங்கத்திடம் வற்புறுத்துமாறு தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலத்திடம் காங்கேசன்துறை தமிழ்க் காங்கிரஸ் கிளை கோரியுள்ளது.

காங்கிரஸ் கிளை திரு பொன்னம்பலத்திடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவித்திருப்பதாவது:-

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைத் தொழிலாளர்களின் நலன் கருதி பென்ஷன் திட்டத்தை அமுல் நடத்த உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் அவசியமாகும். தங்கள் கைத்தொழில் மந்திரியாக இருந்த காலத்தில் சிமெந்துத் தொழிற்சாலையை அரசாங்கத்திடமிருந்து கூட்டுஸ்தாபனத்தின் கைக்கு மாற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டபோது அதில் தொழிலாளரின் பென்ஷன் திட்டமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் கூடுதலான இலாபத்தைத் தரும் சிமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் கடந்த 15 ஆண்டுகளாக அனுபவித்த கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு உதவும் வகையில் பென்ஷன் திட்டம் அமூலாக்கப்பட வேண்டும். தொழிற்சாலையின் வளர்ச்சிக்கும் தொழிலாளர்களின் நலனுக்காகவும் கைத்தொழில்மந்திரி மூலம் தகுந்த முயற்சிகள் செய்யப்படவேண்டுமென விரும்புகிறோம்.

இப்பகுதியிலுள்ள படித்த வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் முயற்சிகள் செய்யவேண்டும்.

## 'தாய்மொழிக் கல்வி அவசியம்'

### காரியாதிகாரி வலியுறுத்தல்

தெல்லிப்பழை, ஞாயிறு

"சுதந்திர இலங்கையில் தாய்மொழிக் கல்விக்கு முக்கிய இடமளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. தாய்மொழிக் கல்வி சுபீட்சமடைந்தால்தான் தமிழ்மக்கள் தமது சமய வளர்ச்சிக்கும், தேசத்தொண்டுக்கும் தமது கடமைகளைச்செய்யக் கூடிய தகுதிபெற்றவர்களாவார்கள்" என்று வலிவடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாசவித்தியாசாலை ஸ்தாபகர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

ஆங்கில மொழியே வேண்டும் என்று பலவருடங்களாக நம்மவர்கள் விரும்பினவேளையில் தாய்மொழியைக் கவனிப்பாரில்லாது போய்விட்டது. இதனால் தமிழ்மொழி வளர்ச்சி தடைப்பட்டது. தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய கல்வித்திட்டம் அமுலாக்கப்படவேண்டும். தற்போதுள்ள கல்விததிட்டம் மாற்றப்படுதல் அவசியமாகும்.

புதிய கல்வித்திட்டங்களை அமுலாக்க சைவவித்தியாசாலைகள் பெரிதும் உதவியாக இருக்கும், சமய, மொழி வளர்ச்சிக்கு உதவும் வகையில் சைவப்பாடசாலைகளை உருவாக்கியவர்களை நாம் போற்ற வேண்டும். நாயன்மார்களுக்கு குருபூசைகள் நடத்தி தமது நன்றியைத்தெரிவிப்பது போலவாமும் பாடசாலைகளை நிறுவியவர்களுக்கு அஞ்சலிசெய்ய வேண்டும்.

செல்வி புஷ்பா செல்வநாயகமும் பேசினார். திருமதி அ. முருகேசம்பிள்ளை பரிசில்களை வழங்கினார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# "ஒற்றுமையில் தான் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாத்திய சகிதம் மல்லாகம் சந்தியிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். திரு குணவர்த்தனா மேலும் கூறியதாவது:

நமது நாட்டில் கிராமமுன்னேற்றச்சங்க இயக்கம் 1940-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 1948-ம் ஆண்டில் தான் அரசாங்கத்துடன் நன்கு தொடர்பு படுத்தப்பட்டு இதற்கான தனி இலாகாவும் அமைக்கப்பட்டது ஆரம்பகாலத்தில், இவ்வியக்கம் வளர சில கஷ்டங்கள் இருந்தன வருடாந்தக் கூட்டம் கூடி நிர்வாகிகளைத் தெரிவு செய்வதோடு செயலற்றதாகவே நின்று வந்தன. ஆனால் இன்று மக்கள் உற்சாகத்தோடும உணர்ச்சியுடனும் பங்கு கொண்டுள்ளனர் மக்கள் மனதில் இப்போது நிரந்தரமான இடத்தைப் பெற்றுள்ளது ஒரு கிராமத்து மக்கள் பொதுநோக்கத்தோடு தனிப்பட்ட அபிப்பிராயபேதங்கள், பிணக்குகள், வேற்றுமைகளை மறந்து ஒரு குடும்பசகோதரர்களாக ஒற்றுமையாக இருக்கவேண்டிய அவசியத்தை கி மு சங்கங்கள் அறிவுறுத்தவேண்டும் முன்னேற்றமான வழிகளை கையாள முக்கம் பயிற்சி செய்தல் வேண்டும் மக்கள் குரோத மனப்பான்மைகளை நீக்கி கிராம வளர்ச்சிக்கு பாடுபடுதல் வேண்டும் சமுதாய ஒற்றுமையை அமைப்பதன் மூலம் கிராமத்தின் தரம் உயர கடமையாற்ற முடியும். இந்நோக்கத்தில் கி மு சங்கத்தோடு சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள் மக்கள் ஊழியர் என்ற நோக்கத்தோடு சிறப்பாக சேவையாற்றி மக்களுக்கு ஆலோசனைகள் கூறுதல் வேண்டும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மக்கள் ஒத்துழைக்கவேண்டும் சமூக ஒற்றுமை நிலவினால்தான் பொருளாதாரவிருத்தி பெற முடியும் அரசாங்க இலாகாக்கள், உள்ளூராட்சிப் பகுதியினர் அளிக்கும் நன்கொடை பணத்தையும் மற்றைய உதவிகளையும் தகுந்த முறையில் உபயோகப்படுத்தப்பட வேண்டும் இதற்கு கிராம மக்கள் ஒற்றுமையாக இருப்பது அவசியம்

கூட்டுறவுத் துறையில் ப. நோ. கூ. சங்கம் முக்கிய பாகம் வகிக்கின்றது. கி மு சங்கம் கூட்டுறவு உட்பட சகல பொதுக் கருமங்களிலும் மக்களை வழிநடத்திச் செல்கின்றது சமாதான சபைகள் மூலம் மக்களின் பிணக்குகள் தீர்க்கப்படுகின்றன; விவசாய, கைத்தொழில், பொருளாதார விருத்திக்கு பெரும்பணிகளைச் செய்து வருகின்றது. எனவே இவ்வியக்கம் மக்களுக்கு சகல காரியங்களிலும் சிறந்த தொண்டினை அளிக்கவல்லது.

## குற்றச்சாட்டு சுமத்தப்படுவது

அரசாங்க உத்தியோகத்தர்கள் மீது பொதுமக்களிடமிருந்து அநேக குற்றச்சாட்டுக்களும் குறைபாடுகளும் சுமத்தப்படுவது உண்டு. பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட குற்றச்சாட்டுகள் தெரிவிப்பது உண்டு. அரசாங்க ஊழியர்கள் ஒருவருக்குக் கிடைக்கும் சலுகைகளை மேலும் அதிகரிக்கசெய்ய உதவுவதுமுண்டு. இன்னும் சிலர் அதிகாரத்தைப் பாவித்து ஒருவருக்கு எதிராக மற்றவர் விருப்பப்படி காரியமாற்றுவது வழக்கம் தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதிலும் ஈடுபடுவது உண்டு.

இக்காலத்தில் அரசாங்க ஊழியர்கள் மீது குறைபாடுகள் அதிகமாகச் சுமத்தப்படுகின்றன. விசாரணை நடத்தி ஆராய்ந்தால் ஒருசிலரே இவ்வாறு பாரபட்சமாக நடக்கின்றனர் என்பது தெரிகின்றது. இதனைத்தவிர்க்க கி. மு. சங்கம் விழிப்பாக உணர்ச்சியாக, ஒற்றுமையாகக் கடமையாற்றினால் வெகு சுலபமாக முடியும். தனிப்பட்டவர்கள் குற்றஞ்சாட்ட இடமில்லாதும் போகலாம். பலம்குறைந்த சங்கங்களை நல்ல நிலையில் கொண்டுவர சமாஜம் முயற்சிகள் செய்தல்வேண்டும்.

இவ்விழாவில் வடமாகாண தற்காலிக அரசாங்க அதிபர் திரு. ஏ. பெருமையினார் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

கிராம மக்களின் முற்போக்குக்குத் தேவையான கருமங்களில் திட்டமிட்டு செயலாற்ற கி. மு. சங்கங்கள் முன்வர வேண்டும், குற்றத்தடுப்பு கைத்தொழில் வளர்ச்சி, கிராம முன்னேற்றம் ஆகியவற்றில் கூடுதல்கவனம் செலுத்தவேண்டும். இன்று அரசாங்கத்தில் போதிய பணம் இல்லை, திறைசேரி காலியாக உள்ளது. உணவு நெருக்கடி அதிகம். வாழ்க்கைச்செலவு கூடியுள்ளது இவற்றைத் தீர்க்க மக்கள் ஆக்கவேலைகளில் ஈடுபட வேண்டும், உணவு உற்பத்தியில் விசேஷ கவனஞ்செலுத்தி அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை தாமே பூர்த்திசெய்துகொள்ள வேண்டும் தனி ஒருபொருளை மட்டும் விளைவிக்காது காலத்துக்கு ஏற்ற பலவிதபொருட்களைப் பெற்றுக்கொள்ளத்தக்க முறையில் பயிர்ச்செய்கை முறை அமையவேண்டும்

காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு வைடி செனரத் "குற்றத் தடுப்பு" என்னும் பொருள்பற்றி பேசுகையில் வேலையில்லாப்பிரச்னை வாழ்க்கைச் செலவு அதிகரித்தல் குடிவெறி ஆகியன மனிதனை குற்றம் புரிவதற்கு ஏற்ற சூழ்நிலையை உண்டாக்குகின்றது என்றார். இவைகள் மக்களிடமிருந்து ஒழிக்கப்பட்டால் குற்றம் புரிதல் குறையுமென்றும்தற்பொழுது நாட்டில் கள்ளச்சாராய உற்பத்தி அதிகம் பரவியுள்ளதென்றும் இதனால் உயிர்களைப் பலர் இழப்பதோடு குற்றம் செய்வதிலும் அதிகம் ஈடுபட வைக்கின்றதென்றும் அவர் கூறினார். யாழ்ப்பாணப் பகுதி மக்கள் குற்றங்களை சுட்டிக்காட்டுவதில் பொலிஸாருக்கு அதிகம் ஒத்துழைப்பு அளிப்பதில்லையென்றும் அவர் கூறினார்.

"குடிசைக்கைத் தொழில்" என்ற தலைப்பில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் திரு வி. பொன்னம்பலம் பேசுகையில் பேனாபிடித்து கடதாசியில் எழுதும் மக்கள் கொண்ட நாடு முன்னேற்றம் அடைவதிலும் பார்க்க வயல்களில் உழைத்து விவசாயம் கைத்தொழில் போன்றவற்றில் ஈடுபடும் மக்களைக் கொண்ட நாடு அதிக முன்னேற்றம் அடைவதை நாம் காணலாம் என்றும் கூறினார்.

இக்கருத்தரங்கில் யாழ்மாவட்ட குடிசைக் கைத்தொழில் அதிபர் திரு எஸ். கந்தவனம் திரு க. பாலசுந்தரம், பண்டிதர் க. நாகலிங்கம், டாக்டர் ஜே. சி. துரைசிங்கம், டாக்டர் ஏ. நடராசா, மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு கி. ஞானசூரியர் ஆகியோரும் கலந்து கொண்டு "குடிசைக்கைத் தொழில்" "கிராம முன்னேற்றம்" "சுகாதாரமும் சௌக்கியமும்" "குற்றத்தடுப்பு" போன்ற தலைப்புகளில் சொற்பொழிவாற்றினர். சமாஜக் காரியதரிசி திரு கி. சண்முகலிங்கம் நன்றி கூறினார்.

# தண்ணீர்க் கஷ்டம்

## மந்திரி நேரில் ஆராய்வார்

சுழிபுரம், ஞாயிறு

காரைநகர் எட்டாம் ஒன்பதாம் வட்டாரங்களின் கஷ்டத்தை போக்குவதற்காக மிஷினரி லொறிமூலம் தண்ணீர் விநியோகம் செய்யுதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. காரைநகர் தமிழ் அரசுக்கட்சி வாலிபமுன்னணியினர் தண்ணீர்க் கஷ்டத்தை நீக்க ஓர் நிரந்தரமான தீர்வுகாண வேண்டுமென்ற நோக்குடன் உள்ளூராட்சி மந்திரி எம். திருச்செல்வத்தை இந்த அமுக்க நிலைமையை விளக்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். வாலிபமுன்னணியினரின் கோரிக்கையை ஏற்றுள்ள மந்திரி அடுத்தமாதம் 3-ம் திகதி இங்கு வருவாரெனத்தெரிகிறது

## சாஸ்திரி

கனடா, ஜூன் 13

லண்டனில் இம்மாதம் 17-ம் திகதி ஆரம்பமாகும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு முடிவடைந்ததும் தாம் நேராக அல்ஜியர்ஸ் செல்ல போவதில்லை என்று இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

லண்டன் மகாநாடு முடிவடைந்ததும் தாம் இந்தியா திரும்பி சில வேலைகளைக் கவனித்த பின்னரே அல்ஜியர்ஸ் செல்லவிருப்பதாக திரு. சாஸ்திரி கூறினார். லண்டன் மகாநாடு 25-ம் திகதி முடிவடைகிறது. அல்ஜியர்ஸ் மகாநாடு 29-ம் திகதி ஆரம்பமாகும்.

## உப்பளம்

சுழிபுரம், ஞாயிறு

கல்லுண்டாயில் உள்ள உப்பளத்தில் உப்பு அள்ளுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனேகமாக அடுத்த மாதத்தில் உப்பு அள்ளப்படும் எனத் தெரிய வருகின்றது.

## சிறுவர் விளையாட்டுப் போட்டி

சுழிபுரம் ஞாயிறு

சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரி சிறுவர் வருடாந்த விளையாட்டுப் போட்டி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கல்லூரி அதிபர் பரிசில்கள் வழங்கினார்.

## ஐயாறன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தார், பல கொழும்பு பிரமுகர்களையும் அங்கு காணக்கூடியதாக இருந்தது.

* * *

காக்கிலும், உடலிலும் அலகு குத்தி காவடி எடுப்பவர் ஒருபால் அந்தக் கடும் வெயிலில் அங்கப்பிரதட்சணம் செய்யும் அன்பர்கள், அடி அளக்கும் தாய்மார்கள் அவர்களது பக்தி மனதை உருக்கி விட்டது. பூசைவழிபாடுகளெல்லாம் மிகப் பக்திசிரத்தையுடன் நடந்தன,

ஆறுமுகக் கடவுள், சர்வாலங்கார பூஜிதராக, வள்ளி தெய்வானை சமேதராக, புஷ்பமாரி பொழிய தேருக்குவந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்க வந்த காட்சி என்றும் மறக்க முடியாததாகும் என்ன புண்ணியம் செய்தேனோ, அவது அந்த பக்திக் காட்சிகளையெல்லாம் காணமுடிந்தது. வாழ்க பருளை அன்பர்கள்.

* * *

நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கு யாழ்ப்பாணத்துக்கு ரயில்மார்க்கமாக ரிஷிகேசத்து சுவாமி சிதானந்தர் விஜயசெய்கிறார்கள். யாழ்ப்பாண ரயில்வே ஸ்டேஷனில் அவரை தரிசித்து வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

* * *

உரை தளர்ந்துடலார் நடுங்கா முனம், நரை விடையுடைய விடம் நல்லமே, பரவுமின் பணிமின் பணிவாரொடே, விரவுமின் விரவாரை விடுமினே.

—திருநாவுக்கரசுசுவாமிகள்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 59-ம் இலக்கத்தில் அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.